டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in


அக்ரி-டாக்டர்
மின்னிதழில் குறைந்த செலவில்
விளம்பரம்
செய்து பயன்பெற
தொடர்புக்கு
80563 05483 • 93602 23193

agridoctor.in | 1.8.2023 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 24 | RNI No.TNTAM/2012/49602 | Vol.11, Issue: 38 - Madurai | Online Edition

# பாமாயில் சாகுபடி பரப்பை அதிகரிக்க சிறப்பு நடவு இயக்கம்

## மத்திய வேளாண் அமைச்சகம் தகவல்

புது தில்லி, ஜூலை 31

நாட்டில் பாமாயில் சாகுபடி பரப்பை அதிகரிப்பதற்காக சிறப்பு நடவு இயக்கம் ஆகஸ்ட் 12ம் தேதி வரை நடத்தப்படவுள்ளதாக வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

பாமாயிலை இந்தியா அதிகளவில் பயன்படுத்தி வரும் நிலையில், பெரும் அளவில் தென்கிழக்கு ஆசிய நாடுகள் உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. பாமாயில் இறக்குமதியைக் குறைத்து உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, நாட்டில் பாமாயில் சாகுபடி பரப்பை அதிகரிப்பதற்காக சிறப்பு நடவு இயக்கம் ஆகஸ்ட் 12ம் தேதி வரை நடத்தப்பட உள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது. அதன்படி, புதிய பகுதிகளில் பாமாயில் நடவு செய்யப்படவுள்ளது. ஏற்கனவே பாமாயில் உற்பத்தி செய்து வரும் ஆந்திரம், தெலங்கானா, தமிழகம், ஒடிஸா, கர்நாடகம், கோவா, அஸ்ஸாம், திரிபுரா, நாகாலாந்து, மிஸோரம், அருணாசல் ஆகிய மாநில அரசுகளுடன் இணைந்து இந்த நடவு இயக்கம் நடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் செயல்பட்டு வரும் பாமாயில் சுத்திகரிப்பு நிறுவனங்களான பதஞ்சலி, காத்ரேஜ், 3எஃப் ஆகியவையும் இந்த சிறப்பு இயக்கத்தில் பங்கெடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இயக்கம் மூலமாக ஆந்திரம், தெலங்கானா, தமிழகம், ஒடிஸா, கோவா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் 7,000 ஹெக்டேர் பரப்பிலும், வடகிழக்கு மாநிலங்களில் 750 ஹெக்டேர் பரப்பிலும் பாமாயில் நடவை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. 2025-26ம் நிதியாண்டுக்குள் பாமாயில் சாகுபடி பரப்பை 10 லட்சம் ஹெக்டேராக அதிகரிக்கவும், பாமாயில் உற்பத்தியை 11.20 லட்சம் டன்னாக அதிகரிக்கவும் மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# மானிய விலையில் விதை நெல் விநியோகம் வேளாண் அதிகாரி தகவல்

தஞ்சாவூர், ஜூலை 31

விவசாயிகள் தற்போதைய சம்பா பருவத்தில் சாகுபடி செய்வதற்கு ஏற்ற நெல் இரகங்கள் பற்றி தஞ்சாவூர் மாவட்டம், அம்மாபேட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ம.கனிமொழி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது,

நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெற பருவம் மற்றும் இரகங்களே முக்கியக் காரணிகளாக அமைகிறது. எனவே நெல் குபடி செய்யக்கூடிய விவசாயிகள் அனைவரும் பருவத்திற்கேற்ற பயிர் இரகங்களைத் தேர்வு செய்ய வேண்டும். தற்போதைய சம்பா பருவத்தில் (ஆகஸ்ட் முதல் செப்டம்பர் வரை) நெல் இரகங்களான கோ 52, ஐஆர் 20, ஏடீடி 38, ஏடீடி 54, பிபிடி 5204, TRY 3, தூயமல்லி ஆகிய நெல் இரகங்களே இப்பருவத் திற்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட இரகங்கள் அம்மாபேட்டை வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டு மானிய விலையில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேலும் நெற்பயிருக்குத் தேவைப்படும் நுண்ணூட்ட உரம் மற்றும் நுண்ணுயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா போன்றவைகளும் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

எனவே தேவைப்படும் விவசாயிகள் மானிய விலையில் விதைகள் மற்றும் இடுபொருட்களைப் பெற்றுப் பயனடையுமாறு அம்மாபேட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ம.கனிமொழி கேட்டுக்கொண்டுள்ளார்.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# இந்திய தேயிலை உற்பத்தி ஜூன் மாதத்தில் சரிவு

புது தில்லி, ஜூலை 31

கடந்த ஜூன் மாதத்தில் இந்தியாவின் தேயிலை உற்பத்தி 13.78 கோடி கிலோவாக சரிந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இது குறித்து இந்திய தேயிலை வாரியம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

கடந்த ஜூன் மாதத்தில் நாட்டின் தேயிலை உற்பத்தி 13.78 கோடி கிலோவாக சரிந்துள்ளது. இது, முந்தைய 2022-ஆம் ஆண்டின் அதே மாதத்தில் 14.31 கோடி கிலோவாக இருந்தது. அந்த வகையில் தேயிலை உற்பத்தி கடந்த ஜூன் மாதத்தில் 3.7 சதம் சரிவைக் கண்டுள்ளது.

மதிப்பீட்டு மாதத்தில் தேயிலை உற்பத்தி வட இந்திய தோட்டங்களில் 10.97 கோடி கிலோவாகவும், தென்னிந்தியத் தோட்டங்களில் 2.81 கோடி கிலோவாகவும் இருந்தது.

கடந்த ஜூன் மாதத்தில் அஸாம் மாநில தேயிலை உற்பத்தி 6.35 கோடி கிலோவாக இருந்தது. இது, முந்தைய 2022ம் ஆண்டின் அதே மாதத்தில் 7.51 கோடி கிலோவாக இருந்தது. எனினும், மதிப்பீட்டு மாதத்தில் மேற்கு வங்க தேயிலை உற்பத்தி 4.04 கோடி கிலோவிலிருந்து 4.26 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது.

மோசமான வானிலை மற்றும் பூச்சிகளின் தாக்குதலால் கடந்த ஜூன் மாதத்தில் தேயிலை உற்பத்தி குறைந்தது. 2023ம் ஆண்டின் ஜனவரி முதல் மார்ச் வரையிலான முதல் 3 மாதங்களில் தேயிலை உற்பத்தி 7.9 கோடி கிலோவாக உள்ளது.

எனினும், 2022-ஆம் ஆண்டின் இதே மாத தேயிலை உற்பத்தியோடு ஒப்பிடுகையில் இது 8.28 கோடி கிலோ குறைவாகும்.

அப்போது நாட்டின் தேயிலை உற்பத்தி 9.32 கோடி கிலோவாக இருந்தது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# விருதுநகர் வட்டார விவசாயிகள் பண்ணைக் கருவிகளை மானிய விலையில் பெற அழைப்பு

விருதுநகர், ஜுலை 31

மாநில வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பண்ணைக் கருவிகள் அடங்கிய தொகுப்பு ரூபாய் 1535க்கு விநியோகம் செய்யப்படுகின்றது. பண்ணை கருவிகள் தொகுப்பில் இரும்பு சட்டி, கடப்பாரை, களைக்கொத்து, மண்வெட்டி மற்றும் 2 கதிர் அரிவாள்கள் உள்ளன.

மேலும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் மின் விசை தெளிப்பான் மானியத்தில் ரூபாய் 2480 இல் வழங்கப்பட்டு வருகிறது.

விவசாயிகள் அனைவரும் வாங்கி பயன் பெறுமாறு வேளாண்மை உதவி இயக்குனர் விருதுநகர், லீமா ரோஸ் தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



# பவானிசாகரில் வேளாண் அதிகாரிகள் மற்றும் வேளாண் விஞ்ஞானிகள் கூட்டாய்வு



ஈரோடு, ஜூலை 31

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் வட்டாரத்தில் வேளாண்மை உழவர் நலத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தில் வேளாண்மை உதவி இயக்குநரின் தலைமையில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், வேளாண் விஞ்ஞானி அவர்களைக் கொண்டு புங்கார் மற்றும் இக்கரைதத்தப்பள்ளி ஆகிய கிராமங்களில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ள வயல்களில் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது.

கூட்டாய்வில் அவர் தெரிவித்ததாவது, இக்கரைதத்தப்பள்ளி ஆகிய கிராமங்களின் சுற்றுப்பகுதிகளில் உள்ள தென்னந் தோப்பில் அதிக அளவில் பூச்சி நோய் தாக்குதல் தென்பட்டதால், வேளாண் ஆராய்ச்சி நிலையம் பூச்சியியல் துறை பேராசிரியர் டாக்டர் கணேசணை கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வின் முடிவில், தென்னையில் அதிகமாக காண்டாமிருக வண்டு, சிவப்பு கூன் வண்டு, கருந்தலைப்பழு, ரூகோஸ் வெள்ளை ஈ, செதில் பூச்சிகளின் தாக்குதல் அதிகமாக காணப்பட்டது. இதனை கட்டுப்படுத்த காய்ந்து விழுந்த பட்டு போன மரங்களை அப்புறப்படுத்தவும், அதனை அகற்றி அளித்திடும், தோப்பை சுத்தமான முறையில் பராமரிக்க அறிவுறுத்தப்பட்டது.

மேலும் வண்டின் முட்டைகள், புழுக்கள் மற்றும் கூட்டுப் புழுக்களை பொறுக்கி அழித்திட அறிவுறுத்தப்பட்டது.

மழை காலங்களில் முதல் மழையினை தொடர்ந்து இனக் கவர்ச்சி பொறிகள் - 4 எண்கள் ஒரு எக்டருக்கு, தென்னை ஒட்டுண்ணிகள் போன்றவற்றை பயன்படுத்த அறிவுறுத்தப் பட்டது.

பாதிக்கப்பட்ட மரங்களில் உள்ள துளைகளை அடைத்திடவும், மணலுடன் வேப்பங் கொட்டைபொடி கலந்த கலவையை மட்டைகளின் இடுக்குகளில் போட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. மேலும் உரம் மேலாண்மை, நுண்ணூட்டச் சத்துகளின் பற்றாக் குறையால் ஏற்படும் அறிகுறிகள் அவற்றை நிவர்த்தி செய்யும் வழிமுறைகள் குறித்தும் விளக்கிக் கூறினார்.

கூட்டாய்வின் போது வேளாண்மை உதவி இயக்குநர் ந.சரோஜா, வேளாண்மை அலுவலர் ஜெயசந்திரன், அட்மா திட்ட பணியாளர்கள் மற்றும் சுற்றுவட்டார விவசாயிகள் அனைவரும் உடனிருந்தனர். சுற்றுவட்டார தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகள் அனைவரும் உடனிருந்து அறிவுரைகளை கேட்டு அறிந்து கொண்டனர்.




## சேலம் பூ மார்க்கெட் விவசாயிகளிடமிருந்து வியாபாரிகள் வாங்கும் விலை நிலவரம் (விலை கிலோ 1க்கு)

| | | | |
|---|---|---|---|
| மல்லி | 500 | மஞ்சள் அரளி | 130 |
| முல்லை | 260 | செவ்வரளி | 160 |
| ஜாதி மல்லி | 240 | ஐ.செவ்வரளி | 140 |
| காக்கட்டான் | 200 | நந்தியாவட்டம் | 30 |
| கலர் காக்கட்டான் | 120 | சி.நந்தியாவட்டம் | 60 |
| மலைக்காக்கட்டான் | 200 | சம்மங்கி | 140 |
| அரளி | 120 | சாதா சம்பங்கி | 140 |
| வெள்ளை அரளி | 130 | | |


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# வரப்பில் பயறு வகை பயிர்கள் சாகுபடி

காஞ்சிபுரம், ஜூலை 31

தற்போது சம்பா பருவம் தொடங்கி உள்ள நிலையில் காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட விவாசயிகள் சம்பா பருவத்திற்கு உகந்த நெல் ரகங்களான TKM-13. BPT-5204, மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி (IWP), NLR-34449. RNR-15048 போன்ற இரகங்களை தரமான விதைக்குவியல் களில் இருந்து தேர்வு செய்து சாகுபடி செய்வதுடன் நெல் வயல்




வரப்புகளில் பயறு வகைப் பயிர்களான உளுந்து, பச்சைப்பயறு மற்றும் துவரை (குறுகிய காலம்) போன்றவற்றை நெல் நடவு மேற்கொண்ட 15 தினங்கள் கழித்து இவற்றை வரப்புகளில் ஒரு ஏக்கருக்கு 2 கிலோ வீதம் 30 செ.மீ இடைவெளியில் விதைப்பு செய்து பயனடைய அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**பயன்கள்**

1. நெல் பயிரைத் தாக்கும் சாறு உறிஞ்சும் பூச்சுகள், குறுத்துப் பூச்சி (ம) இலைச்சுடுப்புழு முன்னதாகவே அறிந்து பயிர் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ள இயலும்.

2. நன்மை செய்யும் பூச்சிகளான பொறி வண்டுகள் எளிதில் கவரப்பட்டு தீமை செய்யும் சாறு உறிஞ்சும் பூச்சிகளை தின்று அழிக்கின்றன.

3. பயறுவகைப் பயிர்கள் சாகுபடி செய்வதால் கூடுதல் மகசூல் பெற்று உபரி வருமானம் பெற வழி வகுக்கிறது.

ஒரு ஏக்கரில் சுமார் 50 கி முதல் 70 கி வரை உளுந்து மகசூல் வரப்பில் உளுந்து சாகுபடி தொழில் நுட்பத்தின் மூலம் கிடைக்கிறது.

4. வரப்பில் உளுந்து விதைப்பதால் வரப்பு தூய்மையாகி களைகளின்றி இருக்குமாவதால் களைகள் மூலம் பரவும் நோய்கள் கட்டுப்படுகின்றன.

இதனை காஞ்சிபுரம், விதைப்பரிசோதனை நிலையம், விதைப்பரிசோதனை அலுவலர் தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**





SATHYAM Agro Clinic
சத்யம் அக்ரோ கிளினிக்
விதை முதல் விற்பனை வரை
வேளாண் மருத்துவ மையம்
சத்யம் விவசாயிகள் கிளப்
SATHYAM FARMERS CLUB
விதை முதல் விற்பனை வரை
விவசாயத்திற்கு தேவையான அனைத்தும் ஒரே இடத்தில்
சத்யம் அக்ரோ கிளினிக்
சத்யம் விவசாயிகள் கிளப் சிறப்பம்சங்கள்
• பயிர்களுக்கேற்ப மாதம் ஒருமுறை அல்லது இருமுறை கள ஆய்வு
• விற்பனை விலையிலிருந்து 50% விலை குறைந்து கொடுக்கப்படும்.
• காலை 10 மணிமுதல் மாலை 6 மணி வரை விவசாய ஆலோசனை வழங்கப்படும்.
• உரமிடுதல் பணியில் விவசாய பணியாளர் கூலியில் 50% பங்களிப்பு.
• விவசாய நிலங்களுக்கு இலவச மண் மற்றும் நீர் பரிசோதனை.
• விளைபொருட்களை அறுவடை செய்ய உதவி.
• விளைபொருட்கள் நியாயமான விலையில் கொள்முதல் செய்யப்படும்.
SATHYAM GROUP OF COMPANIES
Corporate Office : Ellis Nagar, Madurai - 625 016, Tamilnadu, India.
Unit - 1: Melamathur, Madurai - 625 234, Tamilnadu, India.
Unit - 2: Vadipatti, Madurai - 625 218, Tamilnadu, India.
For More Details Contact us: +91 75508 75508
Mail us : sales@sathyamagroclinic.com
www.sathyamagroclinic.com

# தினம் ஒரு மூலிகை

# கடுகு




கடுகு. கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது. சமையலில் தாளிப்பதற்கு பயன்படும் கடுகை பற்றி பார்ப்போம். வட இந்தியாவில் மிகுதியாக பயிரிடப்படும் சிறு செடி இனம் இது. கரும் கடுகு அதிக காரமுடையது, வெண்கடுகு என்ற மற்றொரு வகை நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும். விதையே மருத்துவ பயன் உடையது. வாந்தி உண்டாக்குதல், வெப்பம் மிகுதல், சிறுநீர் பெருக்குதல், செரிமான வேகத்தை மிகுத்தல் ஆகிய மருத்துவ குணம் உடையது. கடுகை புடித்து ஒரு கிராம் அளவுக்கு ஆல்கஹால் அல்லது பாயாசத்தில் கலந்து காலை, மாலை கொடுத்து வர உடலின் அக உறுப்புகளில் உள்ள மாசுக்களை அகற்றும். சிறுநீரக கற்களை அகற்றும். வாத வழிகளை நீக்கும். நினைவாற்றல், உடல் பலம், செரிமான ஆற்றல் ஆகியவற்றை மிகுக்கும். கடுகு உடன் சம அளவு முருங்கை பட்டையை சேர்த்து அரைத்து பற்று போட கை, கால் குடைச்சல், மூட்டு வலி, நரம்பு பிடிப்பு ஆகியவை குணமாகும். பற்றினால் எரிச்சல் உண்டானால் உடனே பற்றை அகற்றி கழுவி விடவும். 10 கிராம் கடுகை பொடித்து கால் லிட்டர் நீரில் ஊறவைத்து வடிகட்டி கொடுக்க விக்கல் நீங்கும். கடுகு எண்ணெயுடன் ஐந்து மடங்கு விளக்கெண்ணெய் சிறிது கற்பூரம் கலந்து தடவி வர மூட்டு வலி, மார்பு வலி நீங்கும்.

தகவல் : **ASN சாமி, அங்கக ஒருங்கிணைந்த விவசாய பண்ணை மற்றும் மூலிகை பண்ணை, ஆதனூர். திருவண்ணாமலை மாவட்டம். 94423 11505.**



# தேசிய விலங்குக்கு ஏன் முக்கியத்துவம் தர வேண்டும் தெரியுமா?



இந்தியாவின் தேசிய விலங்கு புலி. உலகிலுள்ள புலிகளில் நான்கில் மூன்று பங்கு நமது நாட்டில் தான் இருக்கிறது. அதாவது தற்போதைய கணக்கின்படி 3167 புலிகள் உள்ளன. கடந்த 29.7.23 அன்று உலக புலிகள் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது என்பது நாம் அறிந்ததே.

**ஏன் புலிகளுக்கு முக்கியத்துவம்?**

நமக்கு கிடைக்கும் தண்ணீர் முதல் காற்று வரை அனைத்தும் காடுகளில் இருந்து தான் கிடைக்கிறது. அதை காப்பது யார் தெரியுமா, புலிகள் தான். காட்டை காப்பாற்றி, பல்லுயிர் பெருக்கத்திற்கு வழி வகுக்கின்றன. புலிகள் இருக்கும் காட்டில் மனித நடமாட்டம் இருக்காது. அதனால் இயற்கை அழிக்க முடியாத நிலை மரங்கள் வெட்டப்படாது. காடுகளில் மரங்கள் அடர்த்தி அதிகமாகி பறப்பன, ஊர்வன எண்ணிக்கை பன் மடங்கு அதிகமாக புலிகள் காரணமாக இருப்பது குறிப்பிடத் தக்கது.

**புலியின் சிறப்பு இயல்புகள்**

ஒரு புலி ஒரு வேளைக்கு உணவாக 40 கிலோ மாமிசம் சாப்பிடும். அதுவும் பசித்தால் மட்டுமே வேட்டையாடும். இயல்பிலே கூச்ச சுபாவம் உள்ளது. வயிற்றில் குட்டிகளை சுமக்கும் விலங்கையும் இது தாக்காது. இளம் குட்டிகளையும் தாக்காது. ஒரு தடவை பார்த்து விட்டால் எளிதில் மறக்காது.

**புலியின் பயோ டேட்டா**

17 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வாழும் ஓர் உயிரினம். இதனுடைய எடை சாரசரியாக 200 கிலோ. இதனுடைய நீளம் 3.3 மீ. மணிக்கு 60 கி.மீ வேகத்துல ஓடக்கூடிய விலங்கு. புலிகளின் கணக்கெடுப்பு 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும்.

ஒவ்வொரு மனிதனுககும் கைரேகை மாறுவது போல புலிகளுக்கு உடலிலுள்ள வரிகள் மாறுபடும். அதனை அடிப்படையாக கொண்டு கணக்கு எடுக்கப்படுகின்றன.

**மற்ற விலங்குகள் எல்லாம் இருக்கும் போது புலி தேசிய விலங்கானது எப்படி?**

உலகிலேயே அதிகம் பேரால் விரும்பப்படும் ஒரே விலங்கு புலிகள் தான். அதனுடைய கம்பீரமான தோற்றம் மற்றும் வண்ண மயமான உடலமைப்பு, இதனால் என்னவோ புலி தேசிய விலங்கானது.

**புலிகளை பாதுகாக்க அரசு ஏற்படுத்தும் வழிமுறைகள் என்ன?**






அழிந்து வரும் புலிகளை காப்பாற்ற, ஏப்ரல் 1, 1973ல் ப்ரா ஜெக்ட் டைகர்' என்ற அமைப்பை அப்போதைய பிரதமர் இந்திரா தொடங்கி வைத்தார். இதனால் 9 இருந்த புலிகள் காப்பகம் 53 ஆக மாறியது. தற்போது உலகிலுள்ள புலிகள் அதிகமாக வாழும் நாடுகளில் 13யில் 7 நாடுகள் ஒன்றிணைந்து 'குளோபல் டைகர் போரம்' என்ற அமைப்பை புதுடில்லியில் தலைமையிடமாக கொண்டு அமைத்து புலிகளை அழிவில் இருந்து காப்பாற்ற நடவடிக்கை எடுத்து வருகின்றன.

**புலிகள் அதிகமாக உள்ள மாநிலங்கள்?**

மத்திய பிரதேசம், கர்நாடகா, உத்தர்கண்ட் மற்றும் மகாராஷ்டிரா. தமிழகத்திலுள்ள சத்தியமங்கலம் வனப்பகுதியில் புலிகள் உள்ளன.

அழிந்து வருகின்ற புலி இனத்தை காப்போம். அதனுடைய கம்பீரத்தை வனங்களில் காண்போம், வனங்களின் காவலனாக.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் தேனீ வளர்ப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி

திருச்சி, ஜூலை 31

சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வருகின்ற 8.8.2023 அன்று செவ்வாய்க்கிழமை தேனீ வளர்ப்பு குறித்த சான்றிதழ் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**பயிற்சியின் முக்கிய அம்சங்கள்**

தேனீ வகைகள், தேனீ குடும்பம், தேனீ வளர்ப்பிற்கான உபகரணங்கள், தேனீ கூட்டங்களை கண்டுபிடித்து வளர்க்கும் முறை, தேனீ கூட்டங்களை ஆய்வு செய்யும் முறை, தேனீ பராமரிப்பு, தேனீக்களின் இயற்கை எதிரிகளை நிர்வகிக்கும் முறைகள், தேனீக்களுக்கான உணவு பயிர்கள், தேன் சுத்தம் செய்தல் மற்றும் சேமித்துவைத்தல் தேனீ வளர்க்கும் தொழில் முனைவோர்களின் அனுபவ பகிர்வு, சந்தை தகவல், பயிற்சி கையேடு, பயிற்சி சான்றிதழ் போன்றவை.

பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர் பயிற்சி நாளன்று காலை 9 மணிக்கு வந்து பயிற்சி கட்டணம் ரூபாய் 590/- நேரிடையாக செலுத்த வேண்டும்.

பயிற்சி நேரம் : காலை 9.30 மணி முதல் 5 மணி வரை. பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும். தேநீர் மற்றும் மதிய உணவு வழங்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு திட்ட ஒருங்கிணைப்பாளர் / தொழில் நுட்ப வல்லுநர் (பயிர் பாதுகாப்பு), வேளாண்மை அறிவியல் நிலையம், சிறுகமணி தொலைபேசி எண் - 0431296285/ 8122586689. முன்பதிவு அவசியம்.

07.08.2023 வரை பதிவு செய்பவர்கள் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

முகக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக முகக் கவசம் அணிவோம்

AGRIYA

# பயோ கம்போஸ்டர்

மக்க வைக்கும் நுண்ணுயிர் கலவை

INDOCERT
Input Approved in Organic Agriculture






உபயோகியுங்கள்

பயோ கம்போஸ்டர் பண்ணைக் கழிவுகளையும், நகர குப்பைக் கழிவுகளையும் முழுமையாக மக்க வைக்கும் நுண்ணுயிர் கலவையாகும்.

பயோ டெக்னாலஜி முறையில் தயாரிப்பதால் இது சுற்றுப்புறச் சூழ்நிலைகளுக்கு தீங்கு விளைவிக்காது.

LINGA CHEMICALS

Customer Care: 0452 - 2321722

# ஆடித்தபசு பண்டிகையும், நமது விவசாயமும் - ஓர் பார்வை



ஆடிப்பட்டம் தேடிவிதை என்பது நமது விவசாய பெருமக்கள் நன்றாக அறிந்ததே.

கோடை மாதங்களான பங்குனி, சித்திரை மற்றும் வைகாசியில் அக்னி நட்சத்திர கால கட்டத்தை கடந்து, கிணற்றுப்பாசனம் வைத்திருக்கும் ஒரு சில விவசாயிகளால் வைகாசி பட்டத்தில் விதைக்கப்பட்டு பயிர்கள் வளர்ந்து ஆடி மாதத்தில் பூக்கவும், காய்க்கவும் துவங்கும் போதும், மேலும் ஆடி பட்டத்தில் விதைக்கப்பட்டு அடிக்கும் வெயிலினாலும், காற்றினாலும் பயிர்கள் வாடி நிற்கும் நிலையில், ஒரு மழை பெய்தால் செழித்து விடுமே என்ற சூழ்நிலையில் வருவது தான் பிரிக்கப்படாத திருநெல்வேலி மாவட்டத்தில் அடங்கிய தற்போதைய மாவட்டங்களான திருநெல்வேலி, தென்காசி மற்றும் தூத்துக்குடி ஆகியவற்றை உள்ளடக்கிய மக்களால் நடத்தப் பெறும் பண்டிகையான ஆடித்தபசு ஆகும்.

ஆடித்தபசு பற்றி ஆன்மீக ரீதியாக பல கருத்துக்கள் சொல்லப்பட்டாலும், நமது மூதாதையர்கள் இயற்கை சார்ந்த விவசாயத்தையே அடிப்படைத் தொழிலாக கொண்டமையால் அவர்கள் கொண்டாடிய பண்டிகைகளும் இயற்கையை சார்ந்தும் அவர்கள் செய்யும் தொழிலுக்கு பயனுள்ளதாகவும் இருக்குமாறு அமைத்துக் கொண்டனர். அப்பண்டிகைகள் அறிவியல் பூர்வமாகவும் இருந்தது, இன்றும் இருக்கிறது, அது எவ்வாறு என பார்ப்போமா?

ஆடித்தபசு சற்று மழை மறைவுப் பகுதிகளான சங்கரன்கோவில் அதை சுற்றியுள்ள கிராமங்கள் மற்றும் தென்காசியை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள ஸ்ரீகோமதியம்மன் சமேத சங்கரநாராயணன் கோவில் சார்பில் காலம் காலமாக நடத்தப்பட்டு வருகிறது.

அன்றைய தினம் சப்பரத்தேர், திருவிழாவாக தெரு வீதிவழியாக இழுத்து வரப்படும். அப்போது அனைத்து பக்தர் களும் கையில் கல் உப்பை எடுத்து பக்தி சிரத்தையுடன் தங்களது இறைவனை துதித்து வானத்தை நோக்கி உயர வீசுவார்கள். அதன் பயனாக அன்று மாலையோ அல்லது இரவோ மழைபொழிவது வழக்கமாக இருந்தது. அதன் மூலம் இப்பகுதிகளை சுற்றியுள்ள இடங்கள் குளிர்ந்து பயிர் வளர்ச்சிக்கு போதுமான தண்ணீர் கிடைத்து விடும்.

அறிவியல் பூர்வமாக சிந்தித்தால், ஆடி மாதத்தில் வீசப்படும் தென்மேற்கு பருவக்காற்றால், சிறு சிறு துண்டுகளாக பிரிந்து கிடக்கும் மழை மேகங்களை வான் நோக்கி வீசப்படும் கல்




உப்பில் உள்ள சோடியம் குளோரைடு, ஒன்றாக சேர்த்து மழைப் பொழிவை ஏற்படுத்துகிறது. அதனால் அவ்விழாவில் வீசப்படும் கல் உப்பால் செயற்கை மழை பெய்கிறது. இது போன்ற காரண காரியங்களுக்காக நமது முன்னோர்களால் கோவில் விழாக்களும், பண்டிகைகளும் கொண்டாடப்பட்டன என்பதை அறிந்து நாமும் தொடர்ந்து கொண்டாடி பயன் பெறுவோமாக.

பூமி வெப்பமயமாதல், மழை பொழிவு குறைதல் போன்ற இந்த கால கட்டத்தில் ஆடித் தபசு போன்றதொரு பண்டிகையை முறையாக கொண்டாடி மழையை பெற்று பயிர் சாகுபடியை சீரும் சிறப்புமாக செய்து வளம் பெறுவோமாக.!

தகவல் : ம.மகேஸ்வரன், வேளாண்மை அலுவலர், திருநெல்வேலி.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# சிவகங்கை மாவட்ட பண்ணை பள்ளி விவசாயிகளுக்கான ஆயத்த சாகுபடி குறித்த அலைபேசி வழியாக கலந்துரையாடல் பயிற்சி

சிவகங்கை, ஜூலை 31

சிவகங்கை மாவட்ட நெல் மற்றும் உளுந்து பயிறு சாகுபடிக்கான டிஜிட்டல் பண்ணை பள்ளி விவசாயிகளுக்கு 29.7.23 அலைபேசிவாயிலாக கருத்தரங்க பயிற்சி ரிலையன்ஸ் பவுண்டேசன் சார்பாக நடைபெற்றது.

இந்த ஆடியோ கான்பரன்ஸ்யை துவக்கி வைத்த மாவட்ட திட்ட மேலாளர் ஸ்ரீ கிருபா பேசுகையில், நமது மாவட்டத்தில் இவ்வாண்டு முதல் நெல் மற்றும் பயறு வகைகளுக்கான டிஜிட்டல் பண்ணை பள்ளி நடத்தி விவசாயிகளுக்கு ஒரு மடங்கு நிலத்தில் இரண்டு மடங்கு உற்பத்தியை அதிகரித்து, மூன்று மடங்கு வருமானம் தரக்கூடிய தொழில்நுட்ப ஆலோசனை களை அவ்வப்போது வாட்சாப், குறுந்தகவல் மூலமாக விவசாயி களுக்கு வழங்குவதுடன் களபணி ஆய்வு மேற்கொள்ளபடும் என்றார்.அவ்வப்போது ஏற்படும் விவசாயம் மற்றும் கால்நடை சம்மந்தப்பட்ட பிரச்சனைகளுக்கு கட்டணமில்லாத அலைபேசி வாயிலாக (1800 419 8800) என்ற எண்ணைத் தொடர்பு கொள்ள கேட்டுக்கொண்டார்.

இந்த ஆடியோ கான்பிரன்ஸ்யில் கலந்த கொண்ட தொழில் நுட்ப வல்லுநர் சந்திர சேகரன் பேசுகையில் ஆடி மாதம் பிறந்து விட்டது சாகுபடிக்கான ஆயத்த பணிகள் (உழவு போடுதல் கிடை அமர்த்துதல் குளகரம்பை/ வண்டல் மண் அடித்தல் மண்மாதிரி எடுத்தல் கிணற்று நீர் மாதிரி) போன்றவற்றை எடுத்துக் கூறியதுடன் வன விலங்குகளான காட்டுபன்றி, மயில் காட்டு மலை மாடுகளின் தொந்தரவுகளை கட்டுப்படுத்த மேற்கொள்ள பட வேண்டிய முறைகளை தெரிவித்தார்.

மண் மாதிரி எடுக்கும் முறை பற்றி கூறியதுடன் மண் மாதிரிகளை இலவசமாக ஆய்வு செய்து முடிவு கள் விவசாயி களுக்கு வழங்கப்படும் என்றார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

விவசாயிகள் பால்ச்சாமி, அய்யப்பன், ராஜேந்திரன், காசிராஜன், ஜெயம் உள்ளிட்ட விவசாயிகள் தங்களுடைய சாகுபடி அனுபவங்களை கூறினார்.

மேலும் நெல் உற்பத்தியில் பிற மாநில விவசாயிகளுடன் கலந்து இது மாதிரியான தொழில்நுட்ப கருத்து பரிமாற்ற ஆடியோ கான்பரன்ஸ் நடத்திட வேண்டுகோள் விடுத்தனர்.

கடந்த ஆண்டில் இந்த பண்னனை பள்ளியின் உதவியால் நெல்லில் அதிக மகசூல் பெற்றதாக இடைக்காட்டூர் அய்யப்பன் ரீலையன்ஸ் பவுண்டேசன் அமைப்பிற்கு நன்றியை தெரிவித்தார்.

இதற்கான எற்பாடுகளை கள அலுவலர் லிபகா ராமு சிறப்பாக செய்திருந்தார்.

## தலைக் கவசம் உயிர்க் கவசம்
## முறையாக தலைக் கவசம் அணிவோம்



# சேலம் மாவட்டம், ஜலகண்டாபுரம், உழவர் சந்தை 31-7-23 காய்கறிகள் விலை விபரம்

(ரூ/கிலோ)

| | |
|---|---|
| 1. தக்காளி | ரூ.110-125 |
| 2. உருளைக் கிழங்கு | ரூ.30-34 |
| 3. சின்ன வெங்காயம் | ரூ.66-70 |
| 4. பெரிய வெங்காயம் | ரூ.25-30 |
| 5. பச்சை மிளகாய் | ரூ.64-70 |
| 6. கத்தரி | ரூ.35-40 |
| 7. வெண்டைக்காய் | ரூ.30-35 |
| 8. முருங்கைகாய் | ரூ.30-40 |
| 9. பீர்க்கங்காய் | ரூ.40-45 |
| 10. சுரக்காய் | ரூ.15-20 |
| 11. புடலங்காய் | ரூ.20-24 |




| | |
|---|---|
| 12. பாகற்காய் | ரூ.50-55 |
| 13. தேங்காய் | ரூ.20-25 |
| 14. முள்ளங்கி | ரூ.10-14 |
| 15. பீன்ஸ் | ரூ.100 |
| 16. அவரை | ரூ.50-60 |
| 17. கேரட் | ரூ.50-60 |
| 18. வெற்றிலை | இல்லை |
| 19. மாங்காய் | ரூ.25-30 |
| 20. வாழைப்பழம் | ரூ.35-45 |
| 21. கீரைகள் | ரூ.20-24 |
| 22. பப்பாளி | ரூ.20 -24 |
| 23. கொய்யா | ரூ.30-40 |
| 24. சப்போட்டா | ரூ.35-40 |
| 25. ஆப்பிள் | இல்லை |
| 26. சாத்துக்குடி | இல்லை |

தகவல் : நிர்வாக அலுவலர், உழவர் சந்தை, ஜலகண்டாபுரம், சேலம்


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# நுண்ணீர் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் அமைக்க மானியம்

செங்கல்பட்டு, ஜூலை 31

செங்கல்பட்டு மாவட்டத்தில் ஏரி, கிணறு மற்றும் ஆழ்துளை கிணறு ஆகியவற்றின் மூலம் தண்ணீர் பாசனம் செய்து, சுமார் 67000 எக்டர் பரப்பளவில் விவசாயிகள் நெல், உளுந்து, மணிலா உள்ளிட்ட பல்வேறு பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர்.

இவ்வாறு நிலத்தடி நீர் ஆதாரங்களை அதிக அளவில் விவசாய உபயோகத்திற்கு பயன்படுத்துவதால் நிலத்தடி நீர் மட்டம் வேகமாக குறைந்து வருகிறது. எனவே தற்போது






இருக்கும் நீர் ஆதாரத்தினை கொண்டு பயிர்களுக்கு குறைந்த அளவில் தண்ணீர் பாசனம் செய்து அதிக விளைச்சல் பெறுவதற்கு நுண்ணீர் பாசன முறை மிகவும் ஏற்றதாகும். நுண்ணீர் பாசனம் மூலம் 60-70 % வரை பாசன நீர் சேமிக்கப்படுகிறது. மேலும் பயிர் வளர்ச்சிக்கேற்ப பயிருக்கு தேவையான உரங்களை, தேவையான இடத்தில், தேவையான அளவில் பாசன நீருடன் பகிர்ந்தளிக்கப்படுவதால் மண் வளம் மற்றும் நீர்வளம் பாதுகாக்கப்படுவதுடன், பயிர் விளைச்சல் 20% முதல் 50% வரை அதிகரிக்கிறது, இதனை கருத்தில் கொண்டு விவசாயிகளிடம் நுண்ணீர் பாசன முறைகளை ஊக்குவிக்கும் வகையில் பிரதமரின் நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் நுண்ணீர்

மற்றும் தெளிப்பு நீர் பாசனம் அமைக்க சிறு, குறு விவசாயிகளுக்கு 100% மானியமும், பெரு விவசாயிகளுக்கு 75 % மானியமும் அரசால் அளிக்கப்படுகிறது.

நடப்பு ஆண்டில் செங்கல்பட்டு மாவட்டத்திற்கு நுண்ணீர் பாசனம் அமைக்க 350 எக்டர் பொருள் இலக்கும், ரூபாய் 198 லட்சம் நிதி இலக்கும் அளிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது வரை 256 எக்டருக்கு புதிய பதிவுகள் செய்யப்பட்டு, நுண்ணீர்ப் பாசனம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

எனவே, நுண்ணீர் பாசனம் அமைக்க ஆர்வமுள்ள விவசாயிகள் சிட்டா, அடங்கல், நில வரைபடம் ரேசன் அட்டை, ஆதார், சிறு, குறு விவசாயிகள் சான்று மற்றும் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் 2 ஆகியவற்றுடன் தங்கள் பகுதி வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி இத்திட்டத்தில் பயன் பெறுமாறு செங்கல்பட்டு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஆர். அசோக் கேட்டுக் கொண்டார்.

## தலைக் கவசம் உயிர்க் கவசம்

